ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

कदाचिद्गण्यन्ते निबिडनिपतद्वृष्टिकणिकाः

कदाचिन्नक्षत्राण्यपि सिकतलेशाः कुशलिनां ।

अनन्तैराकल्पं शिवगुणगणाश्चारुरसनै-

र्न शक्यन्ते नूनं गणयितुमुषित्वापि सततम् ॥

विष्णुकृतशिवस्तोत्रे ॥

கதா³சித்³க³ண்யந்தே நிபி³ட³நிபதத்³வ்ருஷ்டிகணிகா:

கதா³சிந்நக்ஷத்ராண்யபி ஸிகதலேஶா: குஶலிநா ।

அநந்தைராகல்பம் ஶிவகு³ணக³ணாஶ்சாருரஸநை-

ர்ந ஶக்யந்தே நூநம் க³ணயிதுமுஷித்வாபி ஸததம் ॥

விஷ்ணுக்ருதஶிவஸ்தோத்ரே ॥

சிறந்த ஒரு பண்டிதன் முயற்சி எடுத்துக்கொண்டால் ஒரு சமயம் ஆகாயத்திலிருந்தும் அதிக நெருக்கமாய் விழும் ஜலத்திவலைகளை எண்ணிவிடுவன் வானத்தில் எங்கும் அதிகமாகப் பாவியிருக்கும் நக்ஷத்திரங்களையும் கணக்கிட முடியும். நதிகளிலிருக்கும் சிறுமணல்களையும் எண்ணிவிடலாம். ஹே சிவ, ஹே பரமசிவனே மிகவும் வேகமாகக் கூட்டக்கூடிய சக்திபொருந்திய நாவையுடைய சில பண்டிதக் கூட்டங்களால் கோடிக்கணக்கான ஆயுளைப்பெற்று உம்முடைய குணசமூகங்களைக்கணக்கிட வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டாலும் கணக்கிட முடியாது.

பார்வதீபதியான ஸ்ரீ சந்திரசேகருடைய குணகணங்கள் அனந்தம். அதாவது கணக்கிட முடியாதவை. ஆகையால் பக்தர்கள் எவ்வளவு புத்திமான்களாயிருந்தபோதிலும் அந்த பகவானுடைய குணங்களைப் பூராவும் அறியமுடியாது. அவரவர்கள் புத்திக்கெட்டியவரையில்தான் அறியமுடியும். அவ்வளவே போதுமானது தான். ஒரு பக்தன் பூர்ணமாக நம் குணங்களை அறிந்து பக்தி செய்யவில்லை என்று அவர் நினைப்பதற்கு நியாயமில்லை. பக்தர்களும் இந்த விஷயத்தில் வருத்தப்படநியாயமில்லை. அவரவர்களும் தம் தம் புத்திக்கெட்டியவரையில் பகவத்குணத்தையறிந்து பக்திசெய்தாலும் பகவான் நிச்சயமாய் அனுக்கிரகம் செய்தே தீருவார். இந்த விஷயத்தில் ஒருவரும் சந்தேகப்படவேண்டாமென்று இதின் கருத்தாகும். உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

க்ஷய ௵ மாசி -மீ ௨௨

# ஆர்யமத ஸாரஸங்கிரகம்.

36-வது பக்கத்தொடர்ச்சி.

ஒருவன் தன் முயற்சியாலேயே சாஸ்திரங்களை சாதனமாகக்கொண்டு பரலோகத்துக்கு வேண்டிய சுகத்தை என் பெறக்கூடாது? வீணில் ஆசாரியர் என்ற ஒருவரிடம் சென்று அவருடைய நோக்கத்தை யெதிர்பார்த்து அவரிஷ்டப்படியெல்லாம் நடந்து அவருக்குத் திருப்தியை யுண்டுபண்ணி, அவரிடமிருந்து தான் உபதேசத்தைப் பெறவேண்டுமென்று எதற்காக இவ்வித நிர்ப்பந்தத்தைக் கொடுக்கவேண்டுமென்று சிலருக்குச் சங்கை நிகழலாம். அது சரியல்ல. கர்மானுஷ்டானத்தைச்செய்து சித்தசுத்தியையடைந்த உத்தமபுருஷன் ஆசார்யலக்ஷணம் பொருந்திய சிறந்த குருவை நாடி அவரது அனுக்கிரகத்தால் நேரிடும் உபதேசத்தினாலேயே தான் ஞானமடையவேண்டுமென்று முண்டகம், சாந்தோக்கியம், தைத்தரீயம் முதலிய உபநிஷத்துக்களாலும் மனுஸ்மிருதி முதலிய ஸம்ருதிகளாலும் பல புராணங்களாலும் நன்குவெளியாகிறது. அவைகளின் கருத்தென்னவென்றால் ஆத்ம ஞானத்திற்கு ஸாதனங்களைக் கூறத் தொடங்கிய சுருதி முதல் ஸாதனமாக श्रोतव्य: ச்ரோதவ்ய: என்று ச்ரவணம் என்பதைக் கூறியிருக்கிறது. "ச்ரவணம்" என்றால் "கேட்பது" என்று பொருள். இது தான் ஞானத்திற்கு முக்ய ஸாதனம். இதனால் அறிந்தவரொருவர் சொல்லி அதைக் கேட்டு அறிந்து கொள்வது தான் ஞானத்திற்கு உபாயமே யொழிய வேறில்லை யென்று நன்றாய் ஏற்படுகிறது. அவ்விதம் ஒரு குரு முகமாய் ச்ரவணம் செய்வதால் ஏற்படும் பிரயோஜனம் யாதென்றால், நமக்கு குருவாய் ஏற்பட்டவர் தானும்ஒரு குரு முகமாகவே கேட்டு உபதேசம் பெற்றவராகயிருப்பார். அவருடைய குருவும் அதே

விதமாய் மற்றொரு குருவையடைந்து உபதேசம் பெற்றிருக்க வேண்டும். இவ்விதம் முன்முன்னிருக்கும் குருபாம்பரையை யோசித்தால் மூல குருவாகிய பரமேச்வரனது உபதேசத்தால் வெளியான தத்வார்த்தத்தையே குருபரம்பரையில் பாதுகாத்து வந்திருப்பதால் அதே அர்த்தத்தை நாம் கேட்பதில் நேரில் ஈச்வரோபதேசமான பரமலாபமிருக்கிறது. இதன்றியில் அவரவர் புத்தியால் ஆலோசித்தால் புத்தியின் ஸ்வபாவம் பலவிதமாகையால் ஒரு சமயம் தோன்றியது போல் மறுசமயமும் சரியானபடி க்ரஹிக்குமென்ற நியமமில்லை. இவ்விதம் நிலையற்றதான நம் புத்தியைக்கொண்டு ஒருவிதமான நிர்ணயமும் ஏற்படமுடியாது. சாஸ்திரங்களின் தத்வார்த்தமும் நிலைபெறாது. அவ்விதம் நிலைபெறாத சாஸ்திரார்த்த ஸாதனத்தைக்கொண்டு புருஷார்த்த சித்தியும் பெறமுடியாது. ஆகையால் பரமதத்வமான ஆத்மஸ்வரூபஞானத்திற்கு குரு உபதேசமே முக்யமான ஸாதனமென்றும் அஃதில்லாவிடில் தத்வஞானம் ஏற்படாதென்றும் சாஸ்திரங்களின் கருத்தென்று அறிந்துகொள்ளவேணும்.

(5) பிறகு தன் குருவினால் உபதேசிக்கப்படும் சுருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம் முதலான ப்ரமாணங்களின் பொருளையும் அவைகளின் வேற்றுமையையும் (அதாவது தத்வார்த்தம் இன்னதென்பதையும்) நன்றாய் அறிந்துகொள்ளவேண்டும்.

(6) இவ்விதம் தெரிந்துகொள்வதால் மாத்திரம் பயனையடையமுடியாதாகையால் குருவின் உபதேசத்தை முக்கியமாகக்கொண்டு தன் புத்திக்கும் வாசனைக்கும் உள்ளபடி எவ்விதமான ஈஸ்வர விக்கிரகத்தை ஆராதிக்கும்படி ஆசாரியர் கட்டளையிட்டாரோ அந்த விக்கிரகத்தை உபதேசப்படி மிகுந்த பக்தி சிரத்தையுடன் ஆராதித்து வரவேண்டும்.

(7) இந்தமாதிரி ஆராதிக்கும் ஸமயத்தில் கூட தம்மால் ஆராதிக்கப்படுகிற விக்கிரகம் தான் உயர்ந்தது. மற்ற மூர்த்திகள் ஈச்வரன் அல்லவென்கிற பேதாபிமானம் அடையாமல் ஒரே பரமாத்மஸ்வரூபத்துக்கே உலகிலுள்ள பலவாறான பேத புத்திகளுடன்கூடிய அந்தந்த அதிகாரிகளை அனுக்கிரகிப்பதற்காக அனேக உருவங்களிருக்கின்றன. அவைகளில் நமக்கு இவ்விதமான உருவத்துடன் ஸ்ரீ பகவான் அனுக்கிரகம் செய்கிறானென்று பாவிக்க

வேண்டுமேயல்லாமல் சிறிது, பெரியது, உயர்ந்தது, தாழ்ந்த தென்கிற வேற்றுமையை ஒருகாலும் பாராட்டக்கூடாது.

(8) இவ்வித பாவனையுடன் ஸ்ரீ பகவானை ஆராதித்துவந்தால் பரமேச்வர அனுக்ரஹத்தால் ஏற்படும் பிரஸாதத்தினல் தத்வஞான ஸித்தி ஏற்படும் அவ்விதஞானசித்தி பெற்றவன் அத்வைத பதவியென்கிற மோக்ஷத்தையடைகிறான். இவ்விதம் அடையப்படும் மோக்ஷதசையைத் தான் பாரமார்த்திக பதவியென்று சாஸ்திரங்கள் கருதுகின்றன. அதற்கு முன்னுள்ள ஸ்திதிதான் வ்யாவஹாரிக தசையென்று சொல்லப்படுகின்றது. இந்த தசையில் தான் ப்ரக்ருதியின் பரிணாமமான ஜகத்து,மனது, இவ்விரண்டும் உள்ளது. இவைகள் பாரமர்த்திகமென்று கூறப்பட்ட மோக்ஷதசையில் கிடையா. இவ்விதமான தத்வங்களை லோகக்ஷேமார்த்தமாய் கருணையுடன் உபதேசம் செய்தவர்கள் தான் ஸ்ரீசங்கரபகவத்பாத ஆசாரியஸ்வாமிகள். இம்மகாத்மாவினுடைய சிறந்த சரித்திரங்களைக் கவனித்தால் இன்னும் ப்ரசித்தமாய் நன்கு விளங்கும்.

ஆனல் மோக்ஷபதவியைப்பற்றி ஸ்ரீகண்டாசாரியார், ஸ்ரீராமானுஜாசாரியார், ஸ்ரீமத்வாசாரியார் இந்த மூன்று ஆசாரியர்களும் வெவ்வேறான அபிப்பிராயமுள்ளவர்கள் என்று அவர்களால் லோகக்ஷேமார்த்தமாய் அனுக்ரஹிக்கப்பட்ட பாஷ்யங்களால் வெளியாகிறது. அவர்களும் ஒவ்வொருவரும் சுருதி, ஸ்மிருதி முதலியவைகளைப் பிரமாணமாகக் காட்டியே தாங்கள் சொல்லும் சித்தாந்தத்தை ஸ்தாபிக்கிறார்கள். ஒவ்வொரு மதாசார்யர்களையும் அவரவர்களுடைய சிஷ்யபரம்பரைகள் ஈஸ்வரமூர்த்தியின் அவதாரமென்றும் மகான்களென்றும் தகுந்த மேற்கோளுடன் அறிவிக்கிறார்கள். இவ்வித மகிமை பொருந்திய ஸதாசார்யர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையில்லாத சித்தாந்தத்தை எங்ஙனம் ஸ்தாபித்திருக்கிறார்கள். என்று சங்கிப்பது சரியல்ல. இவ்வித அபிப்ராய பேதங்கள் மூலாசாரியர்களுக்கேற்பட்டதற்குக் காரணம் உலகிலுள்ள அதிகாரிகளின் புத்திபேதத்தை யனுசரித்து ஏற்பட்டிருக்கிறதென்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இவ்விதம் தத்வஞானமடைந்த உத்தம அதிகாரிக்கு சித்திக்கும் மோக்ஷபதவியானது ஜீவன் முக்தியென்றும் விதேஹ முக்தி

யென்றும்இருவிதமாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. ஸாதனம் முதல் (அதாவது முமுக்ஷுயென்னும் முதல்படிமுதல்) விதேகமுக்தி யென்ற மோக்ஷம் வரையிலுள்ள மோக்ஷபூமியை எழுவிதமாக வராஹ உபநிஷத்திலும் வாஸிஷ்டம் முதலிய கிரந்தங்களிலும் பிரித்து எழுதப்பட்டிருக்கிறது. எவ்விதத்தாலும் மேற்படி விதேஹமுக்தியென்ற மோக்ஷத்தையடைந்தவன் க்ருதார்த்தன். அவனே பரமாத்மா. அப்பதவிதான் எல்லாவற்றிற்கும் முடிவு மற்றவைகள் யாவும் சம்சாரதெசையைவிட்டு விலகாதவைகளே யாகும். ஆகையால் அதிகப் புண்யகர்மாவால் சிறந்த மானிடப் பிறவியைப் பெற்ற நாமனைவரும் இக்கொடிய ஸம்ஸார துக்கத்தை அறவே ஒழிக்கவேண்டி ஸத்குருக்களையடைந்து அவர்களுடைய உபதேசத்தைப்பெற்று உத்தமமான என்றுமழிவில்லாத மோக்ஷசுகத்தைப் பெறவேண்டியது முக்கியம்.

உபபத்திராதிபர்.

---

# திருவாதி ஸம்ஸ்கிருத கலாசாலை பழையமாணவர் சங்கம்.

இக்கலாசாலையில் நடந்தேறிய பழைய மாணவர்சங்கம் பல மாணவர்களின் விருப்பப்படி திரும்பவும் நடத்துவதாக (23—12—26) மாலை ஒரு கூட்டங்கூடித் தீர்மானிக்கப்பட்டது.

ஆங்கு பல சிரோமணி- வித்வான் பட்டதாரிகள் வந்து கூடினர் இச்சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியும், காரியதரிசியும், பொக்கிஷதாருமாக முறையே D. T. தாதாசாரியார் அவர்கள் (சிரோமணி) T. N. சுப்பிரமணிய சாஸ்திரி (சிரோமணி) T. G. சோமசுந்திர தேசிகர் (வித்வான்) இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இச்சங்கத்தினுட்கருத்து பட்டதாரிகளை ஒற்றுமைப்படுத்தி ஒவ்வொருவரையும் அறிமுகராக்கச்செய்து பரஸ்பர ஒத்துழைப்பை உண்டுபண்ணி முன்னேற்றமடையச் செய்வதே.

இச்சங்கத்தினங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷம் ஒன்றுக்கு ரூ. 1 கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணத்தை பழையமாணவர்கள் யாவரும் ஏகமனதாக அங்கீகரித்து இவ்வறிக்கையைக்கண்டவுடன் அனுப்பவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இச்சங்கத்தின் இவ்வாண்டுவிழா வருகிற பிப்ரவரி மாதத்திற்குள் நடைபெறும். ஆங்கு பழைய மாணவர்களின் வரவுவேண்டப்படுகிறது. திருவிழாவின் சமயம் பத்திரிகை ஒவ்வொரு அங்கத்தினருக்கும் காரியதரிசியால் அனுப்பப்படும். அச்சமயம் இக்கல்லூரியின் தலைமையாசிரியராகவும், இக்கலாசாலை முன்னேற்றத்திற்குக் காரணமாயும், கீழ்நாட்டுக் கலைகளிலும் மேல்நாட்டுக் கலைகளிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றவருமான ப்ரஹ்மஸ்ரீ S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள் M.A.I.E.S.F.M.U. (professor of Sanskrit & Comparitive philology PresidencyCollegeMadras.) அவர்களின் உருவப்படத்திறப்புவிழா நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

கீழ்குறிப்பிட்ட ஒவ்வொன்றையும் வந்திருந்த பழையமாணவர்கள் ஏகமனதாக அங்கீகரிக்க சங்கம் இனிது நடந்தேறியது. இச்சங்கத்தினங்கத்தினரொவ்வொருவரும் தங்கள் சந்தாக்கட்டணத்தைக் காரியதர்சியவர்களுக்கே அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

T. N. Subramania Sastry,
(*Siromani*)
காரியதரிசி.

---

# நமது கடமை.

ஆரியர்களே!

உயர்குலத்திலுதித்தநாமொவ்வொருவரும் நமதுஸ்தானத்திலிருந்து நழுவாமலிருக்க வழிதேடுவதைக் காட்டிலும் நமக்கு வேறு கார்யமொன்றுமில்லை. நாம்நம்முடையகார்யங்களைச் சரிவரநடத்துவோமாகில் திருடர்களுக்குக்கொடாமல் உயர்ந்தமதியில்வைத்த பொருள்போலாகும். உலகில்கூட ஒரு சிறியஸ்தானத்தை அடைந்து அதை சாச்வதமாகச் செய்துகொள்ளவேண்டுமென்று எவ்வளவு பிரயாசைசெய்கிறார்கள். அதன் பிரயோஜனம் இந்தச் சரீரம் உள்ளவரையில்தான் ஸுகமாகத் தோன்றுகிறது. உள்ளபடி அது ஓர் சுகமா? இல்லை. நாம் என்னாளும் ஸுகமடையஓர் உபாயம் இருந்தால் அதில் நாம் ஏன் சிரமப்படக் கூடாது. அவ்வித உபாயங்கள் அனேகமிருந்தபோதிலும் அதற்குள் சிறந்தது வேதமென்று பெயர் வாய்ந்த ஓர் பிரமாணநூல். இதை நமது முன்னோர்கள் முறைப்படிபயின்று அவர்கள் அதில் சொல்லியபடி நமது கடமையை (நாம் செய்யவேண்டிய கர்மாக்களை) அனுஷ்டித்து அதினின்றும் நல்ல பேரானந்தத்தை அடைந்திருக்கிறார்கள் என்று நாம் சொல்லாமலே விளங்கும்,

இக்காலத்தில் கலிமகாராஜனுடைய கொடிய செயலைத் தவிர வேறு காரணமொன்றும் தெரியவில்லை. வேதங்களோ நாளுக்கு நாள் மாலின்யத்தை அடைந்துகொண்டிருக்கின்றன. இப்போது வேதம் பயின்றவர்களைத் தேடுவோமாகில் ஒரு கிராமத்தில் ஒருவர் இருவர் அகப்படுவதே துர்லபமாகிவிட்டது. கிராமங்களிலிருக்கும் கிரகஸ்தர்கள் தங்கள் புதல்வர்களுக்கும் தினம் ஒரு மணி அல்லது இருமணி நேரம் வேதத்தைக் கற்பிக்கும்படி முயற்சி எடுத்துக்கொண்டால் அவர்கள் நித்யகர்மாக்களுக்கு வேண்டியவைகளைப் பிறரொத்தாசையன்றித் தெரியக்காரணமாகும். முக்கியமாக கிரஹஸ்தர்களுக்கு ஸ்நாநம் ஸந்தியாவந்தனம் பிரம்ஹயக்ஞம் பூஜா வைச்வதேவம் முதலியவைகள் அவசியம் செய்யவேண்டிய கர்மாக்கள். இவைகளை ஒருவர் விதி வழுவாது நடத்துவரேயாகில் அவருக்கு எவ்வளவு பலன்கள் கிடைப்பதாகச் சுருதிகள் கூறுகின்றன. ஒவ்வொருவர்கள் தமது புத்திரர்களுக்கு வேதாப்பியாஸத்தைக் கட்டாயம் செய்விக்கவேண்டும். அல்லது புதல்வர்களில் ஒருவரையாவது வேதத்தைக் கற்கும்படி செய்யவேண்டும் இவ்விதமாக ஒவ்வொரு குடும்பங்களிலும் வேதத்தைக் கற்கவேண்டுமென்று எண்ணினுல் அது ஓர் நடவாத காரியமல்ல. ஆனுல் அவர்கள் ஒரு எண்ணத்தை மறக்கவேண்டும். அதுவே வைதிகர் லௌகிகர் என்பதே. ஒரு கிராமங்களிலிருக்கும் வேதம் பயின்ற வித்வன் மணிகளைக்கொண்டு ஓர் பாடசாலை ஏற்படுத்தினுல் கொஞ்சகாலத்திற்குள்ளாக இக்குறை தீர்ந்துவிடுமென்பதில் ஐயமில்லை. நாம் அவ்விதம் முயற்சி எடுக்காவிடில் மறுபடி இப்பதவியை அடைவதியலாது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும் என்பதாம். இல்லாவிடில் நமது கர்மாக்களைச் சரிவர நடத்தமுடியாது. நம்மால் செய்யப்படும் சகல தர்மங்களுக்கும் மூலம் வேதமே.

वेदोऽखिलो धर्ममूलम् , வேதோऽகிலோ தர்மமூலம் ।

என்று கௌதம வாக்கியமே சான்றுகும். நமது முன்னேர்கள் நம்மிடத்தில் தயவு கூர்ந்து பிற்காலங்களில் மாலின்யம் அடைந்துவிடுமென்றெண்ணியே வேதத்தின் அர்த்தங்களை சுருதி ரூபமாக இயற்றியிருக்கிறுர்கள்.

वेदः कृत्स्नोऽधिगन्तव्यः सरहस्यो द्विजन्मना ।
वेदाभ्यासो हि विप्रस्य तपः परमिहोच्यते ॥

வேத꞉ க்ருத்ஸ்நோऽதிகந்தவ்ய꞉ ஸரஹஸ்யோ த்விஜந்மநா ।
வேதாப்யாஸோ ஹி விப்ரஸ்ய தப꞉ பரமிஹோச்யதே ॥

ஸாங்கமாகத்விஜர்கள் வேதாத்யயனம் செய்யவேண்டும். ஏனென்றுல் பிராஹ்மணர்களுக்கு அதைத் தபஸாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகை

யால் எல்லோரும் தாங்கள் கடமையைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் தோஷங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

योऽनधीत्य द्विजो वेदान् अन्यत्र कुरुते श्रमम् ।
स जीवन्नेव शूद्रत्वं आशु गच्छति सान्वयः ॥

𑌯𑍋𑌽𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌶𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌸 𑌜𑍀𑌵𑌨𑍍𑌨𑍇𑌵 𑌶𑍂𑌦𑍍𑌰𑌤𑍍𑌵𑌂 𑌆𑌶𑍁 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑌾𑌨𑍍𑌵𑌯𑌃 ॥

எவர்கள் வேதாத்யயனம் செய்யாமல் வேறு கார்யங்களில் முயற்சி எடுக்கிறார்களோ அவர்கள் தம் வம்சத்துடன் சூத்ரத்துவத்தை அடைகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையால்

साङ्गो वेदोऽध्येतव्यः । 𑌸𑌾𑌙𑍍𑌗𑍋 𑌵𑍇𑌦𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌃 ।

ஸாங்கமாகவேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். ஆரியர்களே! கிரஹஸ்தர்களே; இனியும் தூங்கவேண்டுமோ? இனிமேல் ஒவ்வொருவரும் நமது பரமாசார்யாளின் பாதகமலங்களை அனுதினமும் காலை மாலைகளில் போற்றி இவ்விதமான கர்மாக்களை அனுஷ்டித்துப் பேரானந்தம் பெற வழியைத்தேடவேண்டுமென்று இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

வி, ஜெகதீசசாஸ்திரியள்.

ஸம்ஸ்கிருதகலாசாலை, திருவாதி.

---

# ஸ்ரீஜகத்குரு காஞ்சிகாமகோடி பீடம் மஹாஸ்வாமிகளின் விஜயமும் உபதேசமும்.

தற்சமயம் 68-வது பட்டாபிஷிக்தாளான ஸ்ரீமத்குருபாதாள் ஆதிசங்கரரின் அவதாரமென்பது ப்ரத்யக்ஷமான விஷயம். அத்புதமான அன்னவரது திருவுருவமே எல்லோர் மனதையுங் கொள்ளைகொள்கிறது. வைதிக லௌகிக ஸாமர்த்யமோ அளவிடமுடியாது. பேச்சுத் திறமையோ பேச்சில் அடங்காது கலாக்ஞானமோ அபாரமானது. அநுஷ்டானமோ அளவில்லாதது. பாத்ராபாத்ரமறிந்து ஈதலோ எவருக்கும் எட்டாதது. இப்புனித மூர்த்தியைத் தரிசிக்கச் சென்னையிலிருந்து அடியேனுடன் பலர் வந்தனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்துதர்சிப்பதையும் வேண்

டிய வரத்தைப் பெறுவதும் பூஜாவிதியும் ஸமாராதனையும் பார்த்தவர்களை அதைவிட்டுவர மனமில்லாமல் செய்துவிடுகிறது. பலர் அப்படியே அங்கு தங்கிவிடுகின்றனர். தென்னார்க்காட்டில் பல விடங்களுக்கு விஜயம் செய்து பக்தர்களைப் புநிதயாக்கினர். விழுப்புரந் தாலூக்காவைச் சார்ந்த தவளகமடவாம்பலமென்றழைக்கப்படும். வட அம்பலத்தில் ஸித்திபெற்ற ஸ்ரீமஹாதேவேந்திர ஸ்வாமிகளின் ஸித்தி ஸ்தாநமான பிருந்தாவநத்தை வெகு ஆதரவுடன் தேடிப்பிடித்து ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகாதிகளைச் செய்து நித்யபூஜை நடந்து வர ஏற்பாடு செய்துளார். பிறகு வளவனூரில் ப்ரபல வியாபாரிகளான வி. கே. அண்ட் ஸன்ஸ் என்ற கம்பெனி சொந்தக்காரர்களுடன் கிராமஜனங்களால் நன்கு வரவேற்கப்பட்டு அவ்வூரில் 10 நாள் விஜயம் செய்தனர். ஷை கம்பெனியார் ஸவரனல் ஸ்ரீ ஆசார்ய பாதுகைகளுக்கு அஷ்டோத்ரசத அர்ச்சனை செய்தார்கள்.

சென்ற பாநுவாரத்தன்று பல வைதிகாபிமானிகளது பிரார்த்தனைக்கி இணங்கி "ச்ருதி ஸ்மிருதி ஸதாசாரங்களைக் கைப்பற்ற வேண்டும்" என்பதைக் குறித்து பண்டித பாமரரஞ்சகமாக, ஸர்வக்ஞபாவத்தை வெளியிடும்படி ச்ருதி ஸ்மிருதி புராணகாவ்ய தேவார திருவாசக திருமொழி குறள் முதலிய மேல்கோளுடன் யுக்தி அநுபவத்தையுமொட்டி அத்புதமாக இரண்டு மணி பரவசமாகும்படி அமிருத தாரையைப் பொழிந்தார்கள். அதன் சுருக்கம் வருமாறு— நமது வேதம் மிகச்லாக்யமானது. ஏதோ முன்னோர் கொண்ட நம்பிக்கையால் நீங்களும் அதை மேலானதென ஒத்துக்கொள்ளுகிறீர்கள். தூப சகடத்தைக் காண்கிறோம். அதனல் கதாகதமென்ற பயனைப்பெற்றுப் போற்றுகிறீர்கள். ஆகாயவிமானததைக்கேட்டாலும்ப்ரத்யக்ஷமாக அதனல்நமக்குப்பயனில்லாததால் அதைப்பற்றி அதிகக்கவலைப்படுவதில்லை. நமது வேதத்தால் நாமடையும் பயனை நன்ருயறிந்தால் அதை அதிகமாகப் போற்ற முடியும். இதர மதஸ்தர்களைப் போல் நம்மவர் அதிகமாக மதத்தைப்பற்றியும் வேதததைப் பற்றியும் கவலை கொள்வதில்லை. அதற்கு ஏனையோருக்கு ஒரே வேதம் ஒரே, கடவுள் நமக்கோ பலவென்பர் சிலர். எவ்வளவு மதநூல்கள் நமக்கு இருந்தாலும் வேதமே மூலமானது. எந்த க்ஷேத்ரத்திலும் "இதுகாசிக்கு வீசமதிகம்" எனக் கூறப்படுவது போல் அன்ய மதத்தினர் தத்தம் மதநூல்களுக்கும் வேதம் என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்கின்றனர். நமது நாட்டிலும்

भारतः पञ्चमो वेदः । वेदः प्राचेतसादासीत् ।

பாரத: பஞ்சமோ வேத: । வேத: ப்ராசேதஸாதாஸீத் ।

பாரதம்ஐந்தாம்வேதம்வேதமே வால்மீகியினிடமிருந்துராமாயணமாக வந்ததுஎனவும்சொல்லப்படுகிறது.திராவிடவேதமெனத்திருவாய்மொழியைக்

கூறுகின்றனர். மதுரை சங்கத்தவரால் "ஆரியமும்செந்தமிழும்தமிழ்திருவ ள்ளுவர் குறளுடைத்து எனவும் கூறப்படுகிறது. ஆதலால் வேதமநாதி உத்கிருஷ்டமானது என்பதற்கு ஆக்ஷேபமில்லை. அந்த வேதத்தை ஒவ்வொரு பிராமணனும் கற்கவேண்டும். உடலில் நமக்குப் பல அங்கங்களிருப்பதுபோல் வேதத்திற்கும் அங்கம் உப அங்கம் பலவுண்டு. அவைகளைச்சேர்த்தே பதினாறு வித்யைகள் எனப்படுகிறது. இதில் சில்பம் முதலிய ஸகல கலைகளும் அடங்கி இருக்கின்றன. ஸ்வசாகையில் ஒரு பாகமாவது அப்யஸிக்கவேண்டும். இதன் வழியே ஸ்மிருதி செல்கிறது.

**श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् । ஶ்ருதேரிவார்தம் ஸ்ம்ருதிரந்வகச்சத் ।**

என்ற காளிதாஸனும் இதையே கூறுகிறான். ஸ்மிருதிகளில் கூறப்பட்டவை ச்ருத்யர்த்தமேயாதலால் அப்படியே அதைப் பின்பற்றவேண்டும். நாம் காணுமல் பல சாகைகள் மறைந்திருக்கின்றன. அவை தர்ம சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. ப்ரத்யக்ஷ ச்ருதியில்லை என்ற வாதத்தை விட்டு மஹர்ஷிகளது வாக்கில் நம்பிக்கைகொண்டு இஹபர ஸாதனமான கர்மாக்களைச செய்யவேண்டும். ப்ராத ஸ்நாநம் ஸந்தியை ஜபம் ஹோமம் தேவதார்ச்சனம் அதிதிபூஜை வைச்வதேவம் இவைகளை மந்திர மந்திரார்த்தத்துடன் உணர்ந்து அநுஷ்டிக்கவேண்டும். வேண்டுமென்றே வர்ணுச்ரம தர்மத்தைத் தங்களுக்கநுகூலமாக பிராமணர்கள் எழுதிவைத்தனர் எனக் கூறுவது அறியாமை, ஜநஸமூஹத்தில் ஒரு சிலரைத் திடீரென "நீ தாழ்ந்தவன். எங்களுக்குப் பணிவிடை செய். தீண்டாதே" என்று சொன்னல் அதன்படி யார் நடப்பர்? அநாதியாயுள்ள தர்மமிது பரம்பரையாக மதுமாம்ஸமுண்ணல் முதலிய துராசாரங்களை விட்டு பணத்தில் ஆசை வைக்காமல் எழ்மையையே தனமாகக் கருதும்படி ஒரு ஜாதியை சுத்தமாகக் காத்துவந்தனர், பெரியோர் அதிலிருந்து சீக்ரமாகநற்பதவியையடையக் கூடும். அதை கவனியாமல் ஸ்வகுலாசாரத்தை விட்டு என் இஹபர துன்பங்களையடைய வேண்டும்.? நாம் அநுஷ்டிக்காவிடினும், நன்கு வேதமுணர்ந்து ஆசரிப்பவரிடம் அலக்ஷிய புத்தியில்லாமல் அவர்களை நன்கு ஆதரிக்கவேண்டும்.

மறுநாள் ப்ரதோஷமானபடியால் யதோக்தமாக ப்ரதோஷ பூஜை செய்து அவ்வூர் சிவாலய தர்மகர்த்தர்களால் ராஜோபசாரத்துடன் வரவேற்கப்பட்டு பிருதுகளுடனும் வாத்யகோஷத்துடனும் ஆலயம் சென்றார்கள். வழிநெடுக வீதி அலங்காரத்துடன் தேங்காயுடைத்து தீபாராதனை ஹாரத்தி முதலியவை செய்யப்பட்டன. ஸ்வாமி தர்சினத்திற்குப்பிறகு மூவ்வாயிரம் ஜனங்கள் கூடிய ஸபையில் முற்பிறவியிற் செய்யப்பட்ட புண்யகர்மாக்களாலும் அவர்களிடமியற்கையில் விளங்கும்கருணையாலும் என்னையும் தன்யனுக்கவேண்டி உபன்யஸிக்கவேண்டுமென்கிற ஆக்ஞாரூபமான அனுக்கிரகம் எனக்கேற்பட்டது.

# ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகளவர்களுடைய ஆக்ஞா மலரைச்சிரசிலேந்தி என்னால் செய்யப்பட்ட உபன்யாஸத்தின் சுருக்கம்.

ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆதிசங்கராசாரியஸ்வாமிகளின் ஸரியான நோக்கத்தை நிறைவேற்றி வருவதால் அவாள் அவதாரமென்பது ப்ரத்யக்ஷம். அவர்களது மஹிமா விசேஷத்தால் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அபீஷ்டத்தை அடைகின்றனர். ஒரு சிறு தொழில் முதல் வேதாந்த அறிவு வரை ஆசார்யன் அருள் அவசியம் வேண்டும். நாம் தனித்தனியே ஓர் ஆசானை அடைவதைவிட ஜகத்குருவான பரமாசார்யனைத் தர்சித்தல் ஸாத்யமாகும். கல்பகதருபோல் யார் எதை நாடி வந்தாலும் அவரவருக்கும் அத்தையளிக்கும் இப்பெரியாரை தர்சிக்காத ஜன்மம் வீணாகும். நாம் மாத்திரம் இவ்வானந்தத்தை அனுபவிப்பதோடு நிற்காமல் நம் நண்பர் ஒவ்வொருவரும் அநுபவிக்கும்படி ஒவ்வோர் கிராமமாக ஆசார்யாளை அழைத்து அவாள் வதன கமலத்திலிருந்து பெருகும் அமிர்ததாரையை அருந்தவேண்டும். ஒவ்வொரு நாளும் இத்திருவுருவம் என் மனதில் படாமலிருப்பதில்லை. இங்கு ஆகர்ஷண சக்தி அதிகமிருப்பதால் பலர் மெய் மறந்திங்கேயே யிருப்பதைக் காணலாம். இப்பாரத நாட்டை ஆதி ஸ்ரீஜகத்குரு அவர்கள் ஜயித்து பௌதிக விஷயத்தை விட்டு ஆத்யாத்மிக வழியில் முனைந்து நின்றார்கள். ஆதலால் அவாள் நாட்டில் மதசக்ரவர்த்தியாக விளங்கும் அந்தப் பீடத்திற்கு வரியளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மனைவி நகையையாவது வைத்து அரசாங்கவரி செலுத்தும் நாம் ஆத்மஸாம்ராஜ்யத்தையளிக்கும் ஆசார்ய பாதுகைக்கு வரி செலுத்தத்தவறலாகாது.

அவாள் நேற்று சொன்ன ஸ்நானம் முதலிய ஆசாரங்களைக் கைப்பற்றவேண்டும். ஒவ்வொரு ஆசாரமும் இரண்டு பயனுள்ளது. ஒன்று பரலோக ஸாதகமானது மற்றொன்று சரீர ஆரோக்யமானது. மநு பராசரர் வார்த்தையில் தற்காலம் நம்பிக்கையில்லை. ஜர்மன் வைத்யர் லூய்ஸ்கூனிவார்த்தைப் படி பலர் காலை முழுக்கும் ஏற்கின்றனர். நம் சரீரத்திலிருந்து ஆத்மசக்தி கீழே இரங்காவண்ணம் நுனியைக் கீழே தொங்கவிடாமல் பஞ்சகச்சமணியும்படி கௌதமர் சொல்வதை மறந்து ஆங்கில வைத்யன் ஆமோதிப்பதைக் கண்டு சந்தோஷிக்கின்றனர். நெற்றிக்கிடும் தேவஸான்னியத்திற்கேற்றதெனக்காட்ட குறிபோடப்படுகிறது. சரீரபலத்தைக்கோரி சூரிய நமஸ்காரம் தேகப்பயிற்சியாகவும், இரண்டு வேளை ஆகாரம் வியாதியில்லாமைக்கும் விதிக்கப்பட்டுளது. ஆராய்ந்து பார்த்தால் இரண்டு பயனில்லாத ஆசாரமே கிடையாது. வைத்ய சாஸ்தி

ரமும் தர்மசாஸ்திரமும் கலந்தே போதிக்கப்படுகிறது. இவ்வர்த்தத்தை விளக்க அசுவினீதேவர்கள் "கோருக்" எவன்வியாதியற்றவனென போஜ ஸபையில் கேட்க மிதமாக உண்டு. கொஞ்சமுண்டவுடன் நடந்து ஜல மலங்களை அடக்காமல் உடனே விட்டு ஜிதேந்திரியனுயிருப்பவன் வியாதி யில்லாதவனெனக் காளிதாஸன் கூறினன். ஆதலால் இவைகளைக் கவ னித்து ஆசாரிய பக்தியால் ஸகல நன்மையையுமடைவது நமது கடமை.

பிறகு ஸ்ரீமதாசாரியாள் ருத்ரன் என்பது வினையவர் கூறுவதுபோல் ஸ்மசானமல்ல. தமோகுணத்தார் தன்னுள்ளே எல்லாவற்றையுமடக்கி சுஷுப்தி என்ற அவஸ்தையை அடைவிப்பதாகும். ஆதலால் மும்மூர்த் திக்கும் மேலான துரீயருத்ரனது ஆநந்தத்தாண்டவமாடும் ஸமயமான ப்ரதோஷத்தில் ஒவ்வொருவரும் ஆலயம் வந்து ஆசார்ய ஞாபகமாக ஸ்ரீபகவானை தர்சிக்கவேண்டுமென்கிற இவ்வழக்கத்தைக் கைப்பற்றும்படி ஆக்ஞாபித்தார்கள். ஸ்ரீமான் வக்கீல், வி.டி. ராமஸ்வாமிஅய்யரவர்கள் ப்ரதி வர்ஷமும் ஆசார்ய காணிக்கையளிப்பதாகப் பலரிடம் கையெழுத்து வாங்கினர். இம்மாதிரி வைபவத்தை ஒவ்வொருவரும் அநுபவிக்கும்படி நினைக்கவே இவைகளை எழுதினேன்.

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா.

---

# இந்தியாவில் தத்கால நிலை.

தொண்டுதொட்டு வர்ணச்ரம தருமத்திலும் செல்வத்திலும் கல்வியி லும் களஞ்சியமெனப் புகழ் வாழ்ந்திருந்த இவ்விந்தியா தற்காலம் க்ஷே மம் குறைந்து க்ஷாமம் நிறைந்து வறுமைக்காளாகியிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. அதற்கு முக்கியமான காரணம் நமது புராதன நாக ரீகமான தோட்டத்தில் நவீன நாகரீகமாகிய (லதை.) கொடியைப்படர விட்டதுதான். குலமாதரை வெறுத்து தத்காலம் அதிகசுகம்போல்தோ ன்றி வஞ்சனை சூது கொலை களவு முதலியவைகளுக்கு இடுப்பிடமாகிற விலைமாதர்களின் மோகவலையில்சிக்கிய ஸ்வல்ப்பகாலத்திற்கெல்லாம்செல் வம் மானம் பலம் குன்றி நோயினல் பீடிக்கப்பட்டு நமனுக்காளாகும் தருவாயில் மோசம்போனேனென்று உணரும் ஆடவர் போல் நவீன நாகரீகமாகிய லதை கொஞ்சகாலமாய் நம்முடைய தோட்டத்தில் தீவிர மாய்ப் படர்ந்து நம்முடைய விருக்ஷங்களின் மீது மரங்களை ஓங்கி வளர விடாமலும் ஸரியாய்ப் பூத்துக் காய்க்காமலும் நம்மதத்திற்கு அஸ் திவாரமான வர்ணசிரம விருக்ஷத்தையும் ஜீவனத்திற்கு முக்கிய ஆதார மான செல்வ விருக்ஷத்திலும் படர்ந்து தீவிரமாய் நாசஞ்செய்துகொண்டு

வருவதை அறியாதவர்களில்லை என்பது திண்ணம். ஆகையால் இனியாகிலும் நாம் தூக்கத்தினின்று விழித்துக்கொண்டு விருக்ஷங்களில் படரும் கொடிகளையும் படர்ந்திருக்கும் கொடிகளையும் அழிக்க முயற்சி செய்யாமலிருப்பது விந்தையினிலும் விந்தை. அந்தோபரிதாபம் இனி நாம் தூங்கினால் கொடிகள் ஜாஸ்திபாய் படரும் திறமையில் விருக்ஷங்கள் பட்டுப் போய்விடும். செவ்வனப் பயிரிடப்பட்ட விருக்ஷங்களை வேலி முதலியவை கட்டிக் காப்பாற்ற முடியாத நாம் புதிதாய் விருக்ஷங்களை வைத்துப் பயிரிடுவது யெவ்வளவு சுலபமானகாரியமென்பதை யாரும் ஒப்புக்கொள்ளார். படர்ந்திருக்கும்கொடிகளை நாசமாக்கும்போது விருக்ஷங்களின் கிளைகளுக்கும் சேதமில்லாமல் செய்யவேண்டுமென்றும் சொல்லிக் கொள்ளுகிறாரே யன்றி முயற்சி செய்வர் சிலரே. சிலர் எல்லாம் கலியின் மஹிமையென்றுமட்டும் சொல்லிக்கொண்டு எல்லாசாஸ்திரங்களிலும் கரை கண்டவர் போல் நற்பெருமைகொண்டு வருபவருடன் வீண்வாதம் செய்யவரவில்லை, இந்திய நண்பர்களே இனியாகிலும் விழித்துக் கொள்ளுங்கள்.

श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

ஶ்ரேயாந்ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ॥

நன்கனுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தர்மத்தைக்காட்டிலும் குணமில்லாத (நன்கு அனுஷ்டிக்கப்படாத) தன் தர்மம் மேலானது. தன் தர்மத்திலேயே சாதல் நல்லது பிறதர்மம் அபாயத்தை விளைவிப்பது. (கீ. 3. அ. 35. ச்லோ)

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥

ஶ்ரேயாந், ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம் ॥

தனக்குறிய கர்மம் நலமில்லாததாயினும் நன்றாய் அநுஷ்டித்த பிறரது கர்மத்தினும் மிக நல்லது. ஸ்வபாவத்தாலமைந்த கர்மத்தைச் செய்பவன் பாபத்தையடையமாட்டான். (கீ. 18. 47) மனுஸ்மிருதி (10. 7)

अध्यापनं चाध्ययनं यजनं याजनं तथा ।
दानं प्रतिग्रहश्चैव षट्कर्माण्यग्रजन्मनः ॥

அத்யாபனம் அத்யயனம் யஜனம் யாஜனம் ததா |
தானம் ப்ரதிக்ரஹஶ்சைவ ஷட்கர்மாண்யக்ரஜன்மன: ||

ஓதுவித்தலும் ஓதுவதும் வேள்வி செய்வித்தலும் வேள்வி செய்தலும் அவ்வாறே ஈதலும் எற்றலுமாகிறவாறும் பிராமணனின் தொழில்களாம். இப்பொழுது ஸ்வல்பகாலமாய் இம்முறை கையாளாமல் நவீனநாகரீகங்களைக் கையாண்டு வந்ததினுல் நவீன நாகரீகக் கொடியினுல் அறுவடையான பலனை நாம் உபயோகிப்பதின் கஷ்டங்களை இங்கு உரைக்கிறேன். இருப்புப்பாதை ஸைகிள் நெல்லு அரைக்கும் யந்திரம் மோடார் வண்டி முதலியதும் நெல்லு முதலியவைகள் சாகுபடி செய்யவும் அறுவடை செய்யவும் தயாரித்து. இவ்விந்தியாவில் பாவுவதற்காக தரகர்கள் மூலமாய் பிரசாரம் செய்யம்படுகின்ற யந்திரம். ஆனுல் இதுவரையில் இந்நாட்டில் ஜாஸ்தியாய் கையாண்டதாய்த்தெரியவில்லை, போனது போகட்டுமென்றுரைத்தேனே அதனைச்சில தொகுதினர் உணர்ந்திருக்கலாம் அப்படியிருப்பினும் கொஞ்சம் சொல்லவேண்டியதவசியம். நம்முடைய மதமாகிற கட்டிடத்திற்கு அஸ்திவாரமான வர்ணுசிரம தர்மங்கள் குறைவடைய்வதற்கு ரயில்வேயிருப்புப் பாதை தான் முக்கியமான காரணம், யந்திரங்களினின்று தயாரிக்கப்படும் அரிசியைச் சாப்பிடுவதால் "பெரி பெரி என்றும் வியாதியும் இன்னும் அனேகம் பெயரிடப்படாத வியாதிகளும் உண்டாகின்றனவென்று நம் நாட்டு வைத்திய சாஸ்திரிகளும் அந்நியநாட்டு வைத்திய சாஸ்திரிகளும் பாரபக்ஷமில்லாமல் சொல்லுகிறுர்கள். யந்திரங்களினுலும் அது ஒடும்படிச் செய்யும் யெண்ணை வகையறுக்களினுலும்பழுது பார்க்கும்ஸாமான்களினுலும் கண்ணுக்குமட்டும்பகட்டாகவும் அவசியமில்லாததுசேர்க்கைப்பொருள்களின் இறக்குமதியாலும் நம்நாட்டுச்செல்வங்கள்விசேஷமாய் அயல்நாட்டுக்கு அனுப்பப்பட்டன. நம்முடையசெல்வவிருக்ஷத்தினின்று அறுவடையானவைகளில்பெரும்பாகம் போயினதுமன்றி இப்போதுவிருக்ஷங்களைக்காய்க்கவிடாமலும்கொடிகள் சூழ்ந்துகொண்டன. இனியாகிலும்இதுவிஷக்கொடியென்றுணருங்கள். இக்கொடியைஅழிப்பதற்கு நமக்கு ஸொல்பநாளாய்கிடைத்திருக்கும் ஆயுதத்தைக் கொண்டு எமாந்து போகாது இவ்வண்ணம் விடாமுயற்சி கொண்டு ஊக்கத்துடன் காரியம் செய்யின் யெல்லாம்வல்ல இறைவன் நமது மனோரதத்தைப் பூர்த்தி செய்வாராக ஓம் தத்ஸத்.

S. K, நாராயணசர்மா
ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய பாடசாலா
சேங்காலிபுரம்.

# ஔபாஸன மாகாத்மியம்.

அன்பர்காள்!

நமது ஆர்யதர்மத்தின் பணிரண்டாவது வயதாரம்பத்தில் பிராமணர்களுக்கு அத்யாவச்யமானதும் ஆங்காங்கு சிஷ்டானுக்ரஹார்த்தம் ஸஞ்சாரம் செய்யும் நமது பரமாசார்யாளால் ஸ்ரீஜகத்குருவால் அதிகாரிக்குத் தக்கபடி உபதேசஞ் செய்து அனுஷ்டித்து வரச்செய்து வருவதான ஔபாஸநத்தைப் பற்றி என் புத்திக்கெட்டியவரையில் எழுத முன்வந்தது ஸாஹஸமேயாகும். ஆயினும் விஷயப் பிராதான்யத்தால் அங்கீகரிப்பீர்கள் என்பதே துணிவு,

மறையோரின் உரிமைக் கடன்களில் மூன்றாவதானது ஹோமம் இதைத் தான் ஔபாஸநம் என்று சொல்லுகிறது. உபாஸனரூபமாயுள்ளது. அஷ்டமூர்த்திகளில் ஒன்றான பரமேசுவரனுடைய அக்னிஸ்வரூபத்தை கிரியாரூபமாயும், த்யான ரூபமாயும் அனுஷ்டிப்பது. இதை கிருஹஸ்தாச்ரமத்தில் புகுந்ததினம்: ராத்திரி புதிதான தன் மனைவியாளோடு நாங்களிருவரும் உயிருள்ளவரையிலும் அக்னிஹோத்திரம் செய்ய ஆரம்பிக்கும் வரையிலும் இந்த ஔபாசநத்தைச் செய்து வருகிறோம்” என்று அநேக வேதியர் முன்னிலையில் செய்துகொண்ட ஸங்கல்பத்தின் பரிபாலனம். இந்த ஔபாஸனத்தை மாத்திரம்செய்துவருவதால் எல்லாதேவதைகளைப் பூசித்துத் திருப்திசெய்வித்த பலனுங்கிட்டுகிறது மேல்கண்ட வேத வாக்யத்தால் **अग्निस्सर्वा देवता:** அக்நிஸ்ஸர்வா தேவதா: என்பதினாலே மற்றும் ஐஹிகபலத்தில் விருப்பமிருந்தாலும் **श्रियमिच्छेद्धुताशनात्** ஸ்ரீயமிச்சேத்துதாசநாத் அக்னியினால் பொருளை விரும்பக்கடவன் என்றும் ஸ்ரீஸூக்தத்திலும் அக்னிபகவானே பொன்னிறமானவளும் மாலின் மனைவியும் தங்கம் வெள்ளிகளினால் செய்தமாலையை அணிந்தவளும் சந்திரனைப் போன்றவளுமான இலக்ஷ்மியை எனக்கு அருள் புரிவாயாக என்றும் துதிக்கப்பட்டிருக்கிறது.

நிஷ்காமனாக நித்தியகர்மங்களைச் சிரத்தையுடன் செய்துவருவதால் ஸத்வசுத்தியேற்படுகின்றது என்பதை பாஷ்யகாரர் கீதாபாஷ்யத்தில்

**इह जन्मनि जन्मान्तरे वा अनुष्ठितानां उपात्तदुरितक्षयहेतुत्वेन सत्वशुद्धिकारणानां** . இஹ ஜந்மநி ஜந்மாந்தரே வா அநுஷ்டிதாநாம் உபாத்ததுரிதக்ஷயஹேதுத்வேந ஸத்வசுத்திகாரணாநாம்!

என்று மூன்றாவது அத்தியாயம் நான்காவதுச்லோகபாஷ்யத்தில் விளக்கியுள்ளார். இவ்வித ஔபாஸனத்தைப் பன்னிரண்டுநாள் செய்யாவிடில் பிராமண்யம் குறைந்து விடுகிறது. அசக்த காலங்களிலும்

ऋत्विगाद्याश्च वा कुर्युस्त्रियः पुंसोऽथ वाग्रतः ।

𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑌾 𑌕𑍁𑌰𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍁𑌂𑌸𑍋𑌽𑌥 𑌵𑌾𑌗𑍍𑌰𑌤𑌃 ।

என்று ருத்விக்கு மனைவி புத்ரன் ஸகோதரன் முதலானவர்களுக்கும் அதிகாரம் ஏற்படுகிறது.

यो भुङ्क्ते तु द्विजपशुः होमं हित्वा स मूढधीः ।
त्रैलोक्यपापं भुङ्क्तेऽसौ विष्ठाशी स्यात्स सूकरः ॥

𑌯𑍋 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑌪𑌶𑍁𑌃 𑌹𑍋𑌮𑌂 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸 𑌮𑍂𑌢𑌧𑍀𑌃 ।
𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌪𑌾𑌪𑌂 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌽𑌸𑍌 𑌵𑌿𑌷𑍍𑌠𑌾𑌶𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸 𑌸𑍂𑌕𑌰𑌃 ॥

அக்ஞானத்தினாலே ஔபாஸனத்தைவிட்டு போஜனம் செய்கிறவன்மூன்றுலோகத்துப் பாவத்துக்குப் பாத்திரமாவதோடு பன்றியாகவும் பிறக்கிறான். ஒருவருஷம் அக்னியை விட்டிருந்தால் பிராயச்சித்தமாக அறுபது படி நெல்லும் மூன்றுபடி நெய்யும் தானம்செய்து மறுபடி அனுஷ்டிக்க வேண்டும். சக்தியுள்ளவர்கள் அக்னிஹோத்ரம் செய்யவேண்டும். அன்றேல் ஸ்மிருதிகளில் கூறின அக்னியை அதாவது ஔபாஸனத்தைச்செய்யவேண்டும்.

नृपैरुपद्रुतो रुग्णो न स्नायी नाग्निमान्यदि ।
महापापी स विज्ञेयस्तस्य नास्ति च निष्कृतिः ॥

𑌨𑍃𑌪𑍈𑌰𑍁𑌪𑌦𑍍𑌰𑍁𑌤𑍋 𑌰𑍁𑌗𑍍𑌣𑍋 𑌨 𑌸𑍍𑌨𑌾𑌯𑍀 𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌨𑍍𑌯𑌦𑌿 ।
𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑍀 𑌸 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌚 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 ॥

அரசனால் பீடிக்கப்படாமலும் வியாதியில்லாமலும் இருப்பவன் பிராதஸ்நானம் செய்யாமலும் அக்னியை உபாஸிக்காமலும் இருந்தால் அவனே மஹாபாபீ அவனுக்குப் பிராயச்சித்தமுமில்லை.

மற்றெந்தக் காரியத்தில் விமுகராயிருந்தாலும் அக்னிபூஜையில் ஜாகருகனாயிருக்கவேண்டும். வைச்வதேவம் தர்சபூர்ணமாஸஸ்தாலீபாகம் ஔபாஸனம் இவைகளைச் செய்துவருபவர்கள் பிர்ம்மஸாக்ஷாத்காரம் பெறுவார். விச்வாமத்திரர் தன் ஆச்ரமத்துக்கு வந்த வஸிஷ்டருக்கு உபசரிப்பதற்காக ஐந்துகோடித் தவப்பயனைக் கொடுத்தார்.

பிறகு ஓர் ஸமயம் விசுவாமித்திரர் தன் ஔபாஸனத்துடன் வஸிஷ்டருடைய ஆச்ரமத்துக்குப்போனபொழுது வஸிஷ்டர் ஸாயங்காலத்தில் செய்த ஔபாஸனாஹுதியின் புண்ணியத்தைக் கொடுத்தார். அது விச்வாமித்திரர் கொடுத்ததைக் காட்டிலும் பெரிதாயிருந்தது.

(தொடரும்)

வீ. உமாமகேச்வர சாஸ்திரீ.